பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 05 வெள்ளிக்கிழமை (18-04-1997) - UTHAYAN A Lively National Tamil Daily ஒளி: 141

## குடாநாட்டில் கைதான 17பேர் விடுவிப்பு!

### 10பேர் 'தாரகி'யில் வருகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட 17 பேர் அநுராதபுரம் நீதிமன்றத்தில நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டு விடுதலைசெய்யப்பட்டனர்.

இவர்களை மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் சட்டத்தரணி செல்வி மகேஸ்வரி கந்தசாமி பொறுப்பேற்றார்.

இவர்களில் 7 பேரை அவர் கொழும்புக்கு அழைத்துச் சென்றார்.

ஏனையோர் ஈ.பி.டி.பி. அமைப்பினரால்பொறுப்பேற்கப்பட்டு திருமலையில் உள்ள அவர்களது அலுவலகத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாகர்கோயிலில் நிலக்கண்ணி!

### 7 படையினர் பலியாகினர்

நாகர்கோயிலில் நேற்று முற்பகல் 11 மணியளவில் டிரக் வாகனம் ஒன்று நிலக்கண்ணியில் சிக்கியதால் அதில் பயணம் செய்த 7 படையினர் கொல்லப்பட்டார்கள் என்றும்—

இந்த டிரக்கில் ஓர் அதிகாரி உட்பட 7 படையினர் பயணம் செய்தார்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் குறித்து மேலதிக விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை. (இ-3)

## திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் முன்னாள் பூசகர் நீதிமன்றில் சரண்!

யாழ்ப்பாணம், ஏப். 18

திருகோணமலை கோணேசர் ஆலய முன்னாள் பிரதம குருக்கள் வியாகேசசர்மா (வயது- 31) நேற்றுக் காலை



வியாகேசசர்மா

10.00 மணிக்கு சட்டத்தரணி எஸ். என். விஸ்வலிங்கம் மூலம் யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சரண் அடைந்தார்.

இவரின் மனைவி அம்பிகாவின் கொலை தொடர்பாக இவர் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்தார்.

இவரை விளக்கமறியலில் வைக்குப்படி உத்தரவிட்ட யாழ். மாவட்ட நீதிபதி ஏ. என். இராமச்சந்திரன், திருகோணமலை நீதிமன்றத்தில் இவரை ஆஜர் செய்ய ஏற்பாடு செய்ய'மாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இவரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட மரணம் என நீதிவான் தீர்ப்பு

### பாலமுரளிக்கும கைது உத்தரவு

திருகோணமலை, ஏப். 18

'சமுத்து நெரிக்கப்பட்டு மூச்சுத்திணறியதால் ஏற்பட்ட மரணம்' என்று திருகோணமலை பதில் நீதிவான் சுபாஜினி வரதன் நேற்றுத் தீர்ப்பு வழங்கினார்.

கோணேசர் ஆலய பிரதம குருக்களாக இருந்த வியாகேசசர்மாவின் மனைவி அம்பிகாவின் மரணம் தொடர்பாக நடந்த மரண விசாரணை முடிவில் நேற்று வழங்கிய தீர்ப்பிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

சந்தேக நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்ட பதில் நீதிவான், முறைப்பாட்டுக்காரரான வெங்கடராமன் பாலமுரளிக்கும் கொலைக்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# உத்தேச மாகாணசபை எதனையும் மத்திய அரசால் கலைக்க முடியும்!

## அரசின் தீர்வுத் திட்டம் குறித்து அமைச்சர் பீரிஸ் நேற்று விளக்கம்

கொழும்பு, ஏப்ரல் 18

அரசின் தீர்வுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள மாகாண சபைகள் இலங்கையின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிராகச் செயற்பட்டால் அவற்றைக் கலைத்து விடும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருக்கும்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக் குடியரசு எந்த விதத்திலும் பிரிக்கப்பட முடியாத ஒரு குடியரசாகும் என்று நேரடியாகவே அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரப் பரவலாக்கலின் முக்கிய நோக்கம் அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் இடையே நிலவுகின்ற இடைவெளியைக் குறைப்பதாகும்.

அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான விடயங்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழு மத்தியிலும் பல்வேறு அரசியல் கட்சிகள் மத்தியிலும் விரிவாக ஆராயப்பட்டு வரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## 9 இலங்கைத் தமிழர்கள் கென்யாவில் தடுத்துவைப்பு

கொழும்பு, ஏப. 18

9 இலங்கைத் தமிழர்கள் கென்யாவின் ஜோமோ கென்யாட்டா சர்வதேச விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தகுந்த பிரயாண ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறிய தாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

★ இம்மானுவேல் மனோகரன் 28, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணம்.

★ விஜயலட்சுமி நாகேஸ்வரன்,

★ ரூபவதனா நாகேஸ்வரன்,

★ அங்கயன் நாகேஸ்வரன்,

★ மனோஜா நா[illegible] வரன் — காளி கோயில் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.

★ டியூக் மரியதாஸ் — 4, மத்திய மேற்கு, குருநகர்.

★ ராஜேஸ் நல்லதுரை — உடுவில், சுன்னாகம்.

★ கந்தையா தமிழ்ச்செல்வி.

★ கந்தையா தனச்செல்வி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதியின் பதாகைகளை அறுத்த பொலீஸ் மீது தாக்குதல்

கொழும்பு, ஏப். 18

வாழைச்சேனை பஸார் வீதியில் நேற்று முன்தினம் நண்பகல் பொலீஸாருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலின் போது ஒரு பொலீஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டார்; இருவர் காயமடைந்தனர். பொதுமக்களிலும் மூவர் கொல்லப்பட ஏழு பேர் காயமடைந்தனர்.

அன்னை பூபதியின் 9 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வாழைச்சேனை நகரில் இரவோடு இரவாகக் கட்டப்பட்டிருந்த பதாகைகளை பொலீஸார் அறுத்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சமயமே இந்தத்தாக்குதல் இடம் பெற்றது.

பொலீஸார் பதில் தாக்குதல் நடத்திய போதே மூன்று பொதுமக்கள் கொல்லப்பட ஏழு பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## இடம் பெயர்ந்த மக்கள் வாழ்க்கை இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும்

### அமெரிக்க கமிட்டி கோரிக்கை

கொழும்பு, ஏப். 18

இடம் பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களது வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்; அது முடியாது போனால் அந்த மக்களுக்கு உதவ முன்வரும் சர்வதேச சமூகத்துக்கு அனுமதி வழங்கப்படவேண்டும்.

அமெரிக்க அகதிகள்கமிட்டி மேற்கண்ட வேண்டுகோளை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் விடுத்துள்ளது.

''இலங்கை இனப்பிரச்சினையும் இடம் பெயர்வும்'' என்ற விடயம் தொடர்பாக விசாரணை நடத்த உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு இலங்கை வந்து ஆய்வுகளை நடத்திய பின்னர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-


★ மேலோட்டமாகப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணுலகில்
06 — 07 — 1950



விண்ணுலகில்
05 — 03 — 1997

## கார்த்திகேசு விஜயரெட்ணம்

(வேலணை உபதபால் அதிபர்)

அன்பின் உறைவிடமே,
அறிவின் சிகரமே
மின்னல் போல் மறைந்தீரே!
நாள்கள் நாற்பத்தைந்து சென்றாலும்
ஆறாது எங்கள் துயர்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நீங்காத நினைவுடன் வாழும்:
**குடும்பத்தினர்**

103, சிவன் கோயில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம். (9525)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரவணமுத்து பூமணியம்மா

(கற்கோவளம்)

கற்கோவளத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் சரவணமுத்துவின் அன்பு மனைவி பூமணியம்மா காலமானார்.

இவர் சதானந்தனின் (இளைப்பாறிய ஹாட்லி ஆசிரியர்) சகோதரியும், காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் பவளம், செல்வம் ஆகியோரின் மைத்துனியும், தவராசா (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற தவரத்தினம் (கவிஞர், கற்கையாளன், ஆசிரியர்) காலஞ்சென்ற தவமலர் மற்றும் தேவதாஸன் (சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர், யாழ்ப்பாண பல்கலைக் கழகம்) தவநாதன், (தாதி உத்தியோகத்தர், ஓமான்) தவரஞ்சினி, தவநேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், நீற்றா (ஓய்வுபெற்ற ஆசிரியை), குணநாயகம் (வீடமைப்பு உத்தியோகத்தர்), சாரதா தேவி, சாந்தி (தாதி உத்தியோகத்தர்), கேசவானந்தன் (இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்), மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெராட் (பிரதம பொறியியலாளர், பிறிமா ஆலை), பாலினி (ஆசிரியை), லோஜினி (ஆசிரியை), சீலன் (இந்தியா), றோமலா (ஆசிரியை), மாலினி (ஜேர்மனி), ரூபன் (கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்), புவேந்திரன் (ஜேர்மனி), கிரிசாந்தி, ஜீவசாந்தி, தவமாநிதி (பல் மருத்துவ மாணவன், அமெரிக்கா,) ஷிறாணி, றோமினி, பிருந்தா, யசோதா, குமுதா, கோகுலன், அனுஷா, லோலா, அன்ரன் (பொறியியலாளர், அமெரிக்கா) திருமால் ஆகியோரின் பேர்த்தியும், ருக்மணிதேவி, யாதவானந்தன் (ஆசிரியர்), ஸ்ரீலோலானந்தன் (பரு. நகரசபை), ராகவானந்தன் (ஆசிரியர்), கௌசலாதேவி (U. K.) ஆகியோரின் முறை மாமியுமாவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ச. தேவதாஸன்**
(மகன்)

கற்கோவளம்,
பருத்தித்துறை. (46411)

## செல்வி இராசர் மரியரட்ணம் (இரத்தினம்மா)

வசாவிளான் உத்தரியமாதா கோயிலடியைச் சேர்ந்த செல்வி இராசர் மரியரட்ணம் (இரத்தினம்மா) 17-4-97 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு திருமதி இராசர் இராசம்மா அவர்களின் மகளும், காலஞ்சென்றவர்களான திருமதி ஆசீர்வாதம் சீவரட்ணம், திருமதி செல்வநாயகம் செபரட்ணம் மற்றும் பேரின்பநாயகம் (வைத்தியர்), செல்வி லில்லிரட்ணம் ஆகியோரின் சகோதரியும், திருமதி மரியநாதர் மேரி, ஆ. மரியதாஸ் (இத்தாலி), திருமதி மரியராசா வேவி, திருமதி யோசேப் யசிந்தா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (19-04-97) சனிக்கிழமை கலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
**இ. பேரின்பநாயகம்**

88/A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். (46421)

## கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 18

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு இன்று கப்பல் சேவை இடம் பெற மாட்டாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

நாளை 500 பயணிகளுடன் கப்பல் சேவை இடம்பெறும் என்றும் —

சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 540 முதல் 560 வரை உள்ளவர்களை நாளை காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறும் — கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை — விமான மூலம் செல்ல பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 279 முதல் 329 வரை உள்ளவர்கள் தமது பதிவுகளை சிவில் அலுவலகத்தில் மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேநேரம் — பட்டியல் இலக்கம் 279, 280, 281 ஆகியவற்றில் உள்ளவர்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் பயணம் செய்யவேண்டும் என்றும் —

அதன்பின் அவை ரத்துச் செய்யப்படும் என்றும் — சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-3)

## கைக்குண்டுகள்

கொழும்பு, ஏப். 18

கொழும்புத்துறைப் பகுதியில் பொதுமக்கள் கொடுத்த தகவலின் பேரில் படையினர் தேடுதல் நடத்திய சமயம் 289 கைக்குண்டுகளைக் கைப்பற்றினர் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கைக்குண்டு வீச்சில் பொலீஸார் பலி!

கொழும்பு, ஏப். 18

மட்டக்களப்பு மாவட்டம், வாழைச்சேனையில் இடம் பெற்ற கைக்குண்டு வீச்சில் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார்.

வாழைச்சேனை இறங்கு துறையில் கடமையில் இருந்த பொலீஸார் மீது விடுதலைப் புலிகள் 3 குண்டுகளை வீசினார்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-3)

## மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 18

தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ் இந்து மகளிர் கல்லூரி நிலைய 1997ஆம் ஆண்டு இறுதி வருடப் பரீட்சை எடுத்த மாணவர்களை நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் முக்கிய கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு பட்டதாரிப் பயிற்சி ஆசிரியர் அமைப்பினால் கோரப்பட்டுள்ளது. (இ)

## நீரிழிவு இரத்த அழுத்த பரிசோதனை

தென்மராட்சி, ஏப். 18

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தப் பரிசோதனைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை தேவாலயத்துக்கருகில் உள்ள பாலர் பாடசாலை மண்டபத்தில் நடத்தப்படவுள்ளன.

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்பரிசோதனையில் கலந்துகொள்ள [illegible] இ. கமலநாதன் தெரிவித்தார். (இ-117)

# மரண அறிவித்தல்கள்

## இந்திராதேவி சிறிராஜ்

(முன்னாள் ஆசிரியை R. C. T. M. S ஆனைக்கோட்டை

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இந்திராதேவி சிறிராஜ் அவர்கள் 15-4-97 செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் கோப்பாய் நிரோ கிளினிக் முன்னாள் உரிமையாளர் Dr சிறிராஜின் (டென்மார்க்) அன்பு மனைவியும், திருகோணமலையைச் சேர்ந்த இராசேந்திரம். யோசப் தம்பதியினரின் அன்புப் புதல்வியும், கிறிஸ்ரின் டயான், கிறிஸ்ரின் டயானா ஆகியோரின் (டென்மார்க்) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற Dr. S. R வேதநாயகம் (திருகோணமலை) மற்றும் தேவநேசன், Dr. மாதவராசா (ஒட்டுசுட்டான்), கருணாநிதி (கனடா), சந்திராதேவி (ஆசிரியை ஆனைக்கோட்டை R.C T.M S.) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி, பத்திமா, கமலா (கனடா), சிவலிங்கம் (தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, யாழ்ப்பாணம்), செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், செந்துஜா, சிரோமியா, ஜனனி ஆகியோரின் அருமைச் சித்தியும், பரிதிதாசனின் (ஆசிரியர் நவாலி மகா வித்தியாலயம்) அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் டென்மார்க்கில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சி. சிவலிங்கம்**
(மைத்துனர்)

ஆறுகால்மடத்தடி,
ஆனைக்கோட்டை. (46405)

## சிவசம்பு பூரணம்

திருநெல்வேலி மேற்கு பத்திரகாளி கோயிலடியைச் சேர்ந்த திருமதி சிவசம்பு பூரணம் 17-04-97 வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ் சென்ற பிரபல வர்த்தகர் திரு. சி. ந. சிவசம்புவின் மனைவியும் மற்றும் திருமதி கமலாதேவியின் அன்புத் தாயாரும், திரு. க. செல்லத்துரை (ஓய்வு பெற்ற திறைசேரி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18-04-97 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் திருநெல்வேலி இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க. செல்லத்துரை**
(மருமகன்)

பத்திரகாளிகோயிலடி,
திருநெல்வேலி மேற்கு (46412)

## மாணிக்கம் சந்திராதித்தர்

(ஒய்வு பெற்ற தபால் அதிபர், வட்டுக்கோட்டை)

சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த மாணிக்கம் சந்திராதித்தர் 16-04-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுகிர்தலக்ஷ்மியின் அன்புக்கணவரும், சிவானந்தஜோதி (கனடா), கனகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், துவாரகாதேவி (கனடா), சுதேந்திரன் (பொறியியலாளர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், ரொசாந்தன், கஜீபன், பிரியதர்சினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17-04-97 இல் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சுதேந்திரன்**
(மருமகன்)

ஆனந்தவாசா,
வடலியடைப்பு. (46402)

## சின்னமணி (தங்கம்) கந்தையா

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட சின்னமணி (தங்கம்) கந்தையா 17-04-97 வியாழக்கிழமை மாலை இறைபதம் எய்தினார்.

இவர் காலஞ்சென்ற ஒடைக்கந்தையாவின் அன்பு மனைவியும், குகதாசன் (லங்கா சிமெந்துலிமிட்டெட்), வரதாசன், சத்தியதாசன் (ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி), சண்முகவடிவு (ஆசிரியர், யா/வீமன்காமம் மகாவித்தியாலயம்), சபேசன், இராகினி (1ஆம் வருடம் யாழ். நுண்கலைப்பீடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திலகவதி, தில்லைமணி (யாழ். மாநகரசபை மின்சாரப்பகுதி) ஆகியோரின் மாமியும் வித்தியாதரன், தபேந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-4-97) வெள்ளி பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குகதாசன்**
(மகன்)

தாசன் பந்தல்,
அம்பலவாணர் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (46420)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் [illegible] நூலகம்

# பட்நாயக் மறைவை அடுத்து புதிய தலைவர் தெரிவு ஒத்திவைக்கப்பட்டது

## இன்று நடைபெறலாம்

புதுடில்லி, ஏப். 18

பிரதமர் தேவகௌடாவுக்குப் பதிலாக புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான ஐக்கிய முன்னணியின் கூட்டம் இன்றைய தினமே நடைபெறும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இக் கூட்டம் நேற்றுமாலை நடைபெறுவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது ஆனால்,

ஜனதாதள் கட்சியின் மூத்த தலைவரும், ஒரிஸா மாநில முன்னாள் முதலமைச்சருமான டாக்டர் விஜுபட்நாயக்கின் மறைவை அடுத்து ஐக்கிய முன்னணியின் புதிய தலைவரைத் தெரிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

பிரதமர் தேவகௌடாவுக்குப் பதிலாக வேறு ஒருவர் தலைமைப் பதவியில் அமர்த்தப்பட்டால் மீண்டும் ஐக்கிய முன்னணி ஆட்சி அமைக்க ஆதரவு வழங்கத் தயார் என காங்கிரஸ் கட்சி தெரிவித்திருக்கிறது.

எனவே இன்று நடைபெறும் ஐக்கிய முன்னணியின் கூட்டத்துக்குப் பின் இந்தியாவின் அடுத்த பிரதமர் யார் என்பது தெரிய வந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக காங்கிரஸின் தலைவர் ஜி.கே. மூப்பனார், வெளிவிவகார அமைச்சர் ஐ.கே குஜ்ரால், தமிழக முதல்வர் மு. கருணாநிதி ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோரில் ஒருவர் ஐக்கிய முன்னணியின் அடுத்த தலைவராக வரலாம் என்ற ஊகங்கள் அடிபட்டு வரும் நிலையில் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஐக்கிய முன்னணியின் தலைவர்கள் டில்லி விரைந்துள்ளனர்.

(ஐ)

## ஜனதாதளின் மூத்த தலைவர் விஜு பட்நாயக் காலமானார்

புதுடில்லி ஏப். 18

முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரரும், ஒரிஸா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சரும் ஜனதாதள் கட்சியின் மூத்த தலைவருமான விஜு பட்நாயக் (வயது81)நேற்று அதிகாலை புதுடில்லியில்மருத்துவ மனையில் காலமானார்.

இவரது மறைவு குறித்து பிரதமர் தேவகௌடா, ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா ஆகியோர் உட்பட இந்தியத் தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்,

பட்நாயக்கின் மறைவை அடுத்து ஒரிஸா மாநிலத்தில் துக்கம் அனுஷ்டிக்கிறார்கள். ஒரு நாள் விடுமுறை அங்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## மூப்பனாரின் தலைமையையே கருணாநிதி விரும்புகிறார்

சென்னை,ஏப். 18

ஐக்கிய முன்னணியின் புதிய தலைவராக தமிழக மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனார் தெரிவு செய்யப் படுவதையே தாம் விரும்புவதாக தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணியின் வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் புதுடில்லி புறப்படுவதற்குமுன் கருணாநிதி இதனைத்தெரிவித்தார்.

(ஐ)

### சென்னை விமான நிலையத்தில்

## நிதியமைச்சர் சிதம்பரத்தின் காரை பொலீஸார் தடுத்துவைப்பு

சென்னை, ஏப். 18

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சட்ட விரோதமாக நிறுத்தி வைத்திருந்ததாகக் கூறி இந்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரத்தின் காரை பொலீஸார் தடுத்து வைத்தனர்.

கடந்த புத்தாண்டு தினத்தன்று இச் சம்பவம் இடம் பெற்றது.

நிறுத்தி வைத்திருந்த கார் காணாமற் போயிருப்பதைக் கண்ட அமைச்சர் சிதம்பரம்விமான நிலைய பொலீஸ் பணிமனைக்கு நடந்து சென்று விசாரித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக உத்தியோகபூர்வ வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களை விமான நிலைய சூழலில் தரிப்பதற்கு பொலீஸார் தடை விதித்துள்ளனர். சாதாரண கார் ஒன்றில் சென்ற அமைச்சர் சிதம்பரமும் இத் தடையில் இருந்து தப்பவில்லை.

விமான நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த தமது காரை தடுத்து வைத்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக ஆத்திரமடைந்த நிலையில்சிதம்பரம்கூறினார்என்று பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஆளும் ஐக்கிய முன்னணி அரசு நம்பிக்கை வாக்கெடுபபில் தோல்வியடைந்ததைத்தொடர்ந்து அமைச்சர் சிதம்பரம் தனது உத்தியோகபூர்வ காரை கையளித்து விட்டிருந்தார்.

(ஐ)

## உலக அரங்கில்

### ஸயர் நிலைவரம்

## கிளர்ச்சிக் குழுவின் தலைவர் தென்னாபிரிக்கா பயணம்

லுபும்பாஸி, ஏப். 18

ஸயர் நாட்டின் பெரும் பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கிளர்ச்சிக்காரர்களின் தலைவர் லோரன் கபீலா தென்னாபிரிக்கா சென்றுள்ளார்.

ஸயர் நெருக்கடி தொடர்பாக தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவை அவர் சந்தித்துப் பேச்சு நடத்திவிட்டு உடனடியாகவே ஸயர் திரும்பி விடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

''இன்னும் மூன்று வாரகாலத்தினுள் நாங்கள் தலைநகர் கின்ஸாசாவில் இருப்போம்'' என்று தென்னாபிரிக்கா புறப்படுவதற்கு முன்னர் லுபும்பாஸி விமான நிலையத்தில் வைத்து கபீலா தெரிவித்தார்.

(ஐ)

## தலைநகருக்கு முன்னேறினால் பயங்கர விளைவுகள் ஏற்படும்

### அமெரிக்கா எச்சரிக்கிறது

வாஷிங்டன், ஏப். 18

ஸயரின் உள்நாட்டு யுத்தம் தலைநகர் கின்ஸாசாவுக்குப் பரவுமானால் அது பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா எச்சரித்திருக்கிறது.

தென்னாபிரிக்காவில் இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலமாக இரு தரப்பினரும் உள்நாட்டு யுத்தத்துக்கு சமாதானத் தீர்வைக் காண வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது. அத்துடன் அதிபர் முபுட்டு பதவியில் இருந்து விலகிவிட வேண்டும் என்று அமெரிக்கா விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த உள்நாட்டு யுத்தம் மேலும் விஸ்தரிக்கப்படுவது பெரும் அநீதியான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் பொது மக்களே இதனால் உயிரிழக்க நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

### கின்ஸாசாவில் உள்ள

## அமெரிக்கர்களை வெளியேற்ற துருப்புகள் தயார் நிலையில்

நியூயோர்க், ஏப். 18

ஸயர் நாட்டின் தலைநகரான கின்ஸாசாவை கிளர்ச்சியாளர்கள் நெருங்கும் வேளையில் அங்குள்ள 450 அமெரிக்கப் பிரஜைகளையும் பாதுகாப்பாக வெளியேற்றும் திட்டத்தை அமெரிக்கா தயார் நிலையில் வைத்துள்ளது.

இவர்களை அங்கிருந்து மீட்க வசதியாக ஆயத்த 400 அமெரிக்கத் துருப்பினர் கடற் பகுதியில் தயார்நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக ராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் நிக்கலஸ் பேர்ண் தெரிவித்தார்.

(ஐ)

## 50 குர்திஷ் கிளர்ச்சியாளர் சுட்டுக் கொலை

ஏப். 18

துருக்கிய இராணுவம் 50 குர்திஷ் கிளர்ச்சியாளர்களைச் சுட்டுக் கொண்டுள்ளது.

துருக்கியின் கிழக்கில் இடம் பெற்ற மோதலில் குர்திஷ் பாட்டாளி மக்களின் உறுப்பினர்களான இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

துன்செலிக் என்ற இடத்தில் கடந்த இரு நாள்களாக மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. இந்த மோதல்களின் போது அரச தரப்புக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் வெளியிடப்படவில்லை.

(ஐ-10)

## ஈரானுக்கு ரஷ்ய ஏவுகணைகள்?

ரஷ்யா ஈரானுக்கு ஆகாயத் தற்காப்பு ஏவுகணைகளை விற்றுவருவதாக ''வாஷிங்டன் ரைம்ஸ்'' நாளிதழ் தெரிவிக்கிறது.

ரஷ்ய ஆயுத விற்பனையாளர்கள் சுமார் 500 அதிநவீன விமான எதிர்ப்பு ஏவுகணைகளை விற்க முன்வந்துள்ளதாகத் தெரிவிககப்பட்டுள்ளது.

இந்த ஏவுகணை ஒன்றின் விலை சுமார் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களாகும்.

இந்த ஆயுத விற்பனை ஈரானுக்கு ஆயுதங்களை விற்பதில்லை என்ற அதிபர் யெல்ஸினின் அறிவிப்புக்கு மாறாக இருப்பதாக அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது.

## நத்தனியாகு மீது விரைவில் வழக்கு!

டெல் அவிவ் ஏப். 18

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு மீது ஊழல் குற்ற வழக்குத் தாக்கல் செய்ய இஸ்ரேலியப் பொலீஸ் பரிந்துரை செய்துள்ளது.

பிரபல்யமும் திறமையும் இல்லாத வழக்கறிஞர் ஒருவரை ஜெருசலேம் நகர் சட்டமா அதிபராக நியமித்ததில் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகு திரை மறைவு சதியிலும், மிரட்டலிலும், ஊழலிலும் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதமர் என்ற வகையில் அவர் தனது நம்பகத்தன்மையை இழந்துவிட்டார் என பொலீஸ்துறை தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினையால் பிரதமர் நத்தனியாகுவின் அரசு கவிழ்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்காசிய சமாதான முயற்சியில் நெருக்கடியைச் சந்தித்துள்ள வேளையில் இந்தப் பிரச்சினை மேலும் அரசியல் பின்னடைவை அவருக்கு ஏற்படுத்தவுள்ளது.

(ஐ-10)

## உயிரிழந்த ஹஜ் யாத்திரிகரின் எண்ணிக்கை 343 ஆக உயர்வு

### சடலங்களை இனங்காண முடியாத நிலை

மக்கா, ஏப். 18

மக்காவில் இடம்பெற்ற தீ விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 343 ஆக உயர்ந்துள்ளது. காயமடைந்தோரின் எண்ணிக்கை இரண்டாயிரத்தைக் கடந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலான சடலங்கள் அடையாளம் காணப்பட முடியாத அளவுக்கு கருகிவிட்டன.

அடையாளம் காணும் முயற்சிகள் இன்று ஹஜ் யாத்திரைக்குப் பின்னரே மேற்கொள்ளப்படவுள்ளன.

பெரும் தீ விபத்தினைத் தற்காலிகமாக மறந்துவிட்ட பக்தர்கள் ஆர்வத்தோடு அராபத் மலை நோக்கி யாத்திரை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 20 லட்சம் பக்தர்கள் இந்தப் புனிதயாத்திரையில் ஈடுபட்டுள்ளனர்.

தீ விபத்தில் இறந்தவர்கள் குறித்த விவரங்கள் சேகரிப்பதிலும் தகவல்களை அந்தந்த நாடுகளுக்கும் உறவினர்களுக்கும் அனுப்பி வைப்பதிலும் சவுதி அரேபிய அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். விபத்தில் பலியான இந்தியர்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்க உயர்குழு ஒன்று புதுடில்லியில் இருந்து மக்கா விரைந்துள்ளது.

மக்கா நகரில் இடம்பெற்ற மனித சோகம் குறித்து பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கற் செய்தி வெளியிட்டுள்ளனர்.

மரணமடைந்தவர்களில் சுமார் 150 பேர் இந்தியர்கள், சுமார் 60 பேர் பாகிஸ்தானியர்கள்.

இந்த ஆண்டு இந்தியாவிலிருந்து சுமார் 80 ஆயிரம் யாத்திரிகர்கள் மக்கா நகர் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

# நாய்களால் கடியுண்ட 396 பேர் அனுமதி

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் கட்டாக்காலி நாய்களினால் கடிபடுவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 15 ஆம் திகதி வரை 396 பேர் நாய்களினால் கடியுண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் —

இவர்களில் 78 பேர் விசர் நாயினால் கடியுண்டதாகவும் ஆஸ்பத்திரி புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி மாதத்தில் 147 பேரும், பெப்ரவரி மாதத்தில் 67 பேரும், மார்ச் மாதத்தில் 105 பேரும், ஏப்ரல் 15 ஆம் திகதிவரை 77 பேரும் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டுள்ளனர்.

இக்காலப் பகுதியில் சாவகச்சேரி நகரசபையினால் சுமார் 250 -க்கு மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (ஐ-117)

## நீர்வேலியில் சனியன்று வீசிய பலத்த காற்று

### வீட்டுக் கூரைகள் சேதம்

கொழும்புத்துறை, ஏப். 18

நீர்வேலிப் பகுதியில் கடந்த சனியன்று நண்பகல் கடும் மழையுடன் பலத்த காற்று வீசியது.

இதனால் பயன்தரு மரங்கள் பல முறிந்தன. வீடுகள், கட்டடங்கள் சிலவற்றின் கூரைகள் சேதமடைந்தன.

சில கட்டடங்களில் கூரைத் தகடுகள் தூக்கி வீசப்பட்டன.

நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தின் கிளை இலக்கம் 8 இன் கூரைத் தகடுகள் வீசப்பட்டதினால் அப்பகுதியில் நின்றிருந்த இருவர் காயமடைந்தனர். (ஐ-30)

## பழுதடைந்த இறைச்சி கைப்பற்றி அழிப்பு!

உடுப்பிட்டிச் சந்தைப் பகுதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத இறைச்சி யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகரால் அண்மையில் அழிக்கப்பட்டன.

பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து இப் பகுதியில் திடீர்ப் பரிசோதனை நடத்திய போது பாவனைக்கு உதவாத இறைச்சி கைப்பற்றப் பட்டு பொதுமக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

வடமராட்சிப் பகுதியில் உள்ள பல தேநீர்க் கடைகளில் அண்மையில் திடீர்ப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. கடைகளில் பேணப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. (ஐ-118)

## கால்நடைத் தீனியாகும் மரக்கறி வகைகள்

சந்தைகளில் மரக்கறி வகைகள் பெரும் விலை வீழ்ச்சி கண்டிருப்பதை அடுத்து மரக்கறி வகைகள் பலவும் கால்நடைத் தீனிகளாக மாறியுள்ளன.

ஆடு, மாடுகளை வளர்ப்போரும், கோழி வளர்ப்போரும் இதனால் பெரும் பயனடைகின்றனர்.

சாவகச்சேரி சந்தைக்கு வரும் சிலர் தமது ஆடு மாடுகளுக்கு என கத்தரிக்காய், பயற்றங்காய், கரட் என்பனவற்றைத் தொகையாக வாங்கிச் செல்கின்றனர்.

கோழி வளர்ப்போர் கோவாவை வாங்கித் தீனியாகப் பயன்படுத்துகின்றனர். (ஐ-31)

## சமய சந்திகளில்

புத்தூர் அருள்மிகு ஸ்ரீ பஞ்சஸ் உணா ஸ்ரீ நகுல ஞான வைரவப் பெருமான் திருக்கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 7 மணிக்கும் 7.30 மணிக்கும் இடையில் நடைபெறும்.

இக் கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ தி. கெங்காதரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். (ஐ-173)

★ ★ ★

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் மாம்பழத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-30)

# தந்தை செல்வா நினைவு நிகழ்வுகள் தமிழர் பெருவிழாக்களாக நடக்கட்டும்

### மாவை. ஆதீனகர்த்தா அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

தமிழர் தந்தைசெல்வநாயகத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் எவ்வித கட்சி. சமய, சங்க சார்பின்றி தமிழ் பேசும் மக்களது பெருவிழாக்களாக நடைபெற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்.

தந்தை நூற்றாண்டு ஆரம்பத்தையொட்டி மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் வாசலில் நடைபெற்ற பிரார்த்தனை வைபவத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே குருக்கள் இவ்வாறு சொன்னார்.

எஸ். ஜே வி. செல்வநாயகம் நூற்றாண்டு நிறைவு தேசிய அவை சார்பாக வலிகாமம் வடக்கு மக்கள் சார்பில் நடைபெற்ற பிரார்த்தனை கலந்துரையாடல் வைபவத்துக்கு திரு. சி. சிவமகாராசா தலைமை வகித்தார்.

தந்தை செல்வா பல போராட்டங்களை முன்னிறுத்தி நடத்தியவர். அவற்றினால் பெறப்படும் பலன்கள் எதுவித பயன்களையும் தரவில்லை என உணர்ந்தார். அதனாலேயே ''இனித் தமிழ் மக்களைக் கடவுளே காப்பாற்ற வேண்டும்'' என்று பகிரங்கப்படுத்தினார்.

அதனால் அவரது நினைவு நிகழ்வுகளை கடவுள் சந்நிதிகளிலேயே பிரார்த்தனைகளை நடத்தி அன்னாரது கடந்த காலச் செயற்பாடுகளை நினைவு கூர்ந்து அதற்கேற்ப நாம் அரசியலை எதிர்கொள்ள வேண்டும் — என்றும் குருக்கள் தமது உரையில் தெரிவித்தார்.

தந்தை செல்வநாயகம் ஆன்மீக வலிமையை முன்னிறுத்தி, தமிழ் மக்கள் சகல உரிமைகளையும் சமமாகப் பெற்றுவாழ வேண்டும் என்பதற்காகப் போராடியவர். 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற சிந்தனைக்கு உரமிட்டு அதற்காகவே தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த தேசியத் தலைவர் அவர் — என்று தலைவர் தமது உரையில் தெரிவித்தார்.

ந. சிவபாதம் பேசுகையில் கூறியதாவது:-

எதிர்காலத்தில் [illegible] ழப் போகிறது [illegible] தந்தை செல்வா தீர்க்க தரிசனத்தோடு நிதர்சனமாக உணர்ந்தார். அதனால்தான் தமிழினம் தனக்குரிய தனித்துவ அந்தஸ்தோடு, தன்னாட்சி பெற்ற தனியினமாக, தனக்கென்றிருக்கும் பெருநிலப்பரப்பில் மகிமையோடு வாழவேண்டும் எனக் கருத்திற் கொண்டார். அதற்கேற்ற செயலுருத் திட்டங்களைத் தீட்டும் வேளையில் அவர் எம்மைவிட்டுப் பிரிந்தது துரதிர்ஷ்டமே — என்றார்.

மற்றும் பலரும் பேசினர்.

திருமுறை ஓதுதல் சிறப்பாக நடைபெற்றது.

விழாவின் போது வலி. வடக்கு மக்கள் சார்பாக பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

வலி. - வடக்கு மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதித்து தமது தொழில்களைச் செய்ய அனுமதிக்க வேண்டும்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை சிவன் கோயில் ஆகியவற்றை மக்கள் வழிபாட்டுக்குத் திறந்து விட வேண்டும்.

கீரிமலை தீர்த்த [illegible] தரிசிக்க உடனடியாக வசதி செய்ய வேண்டும். (அ)

## செய்திச் சாரம்

### சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்குகள்

வடமராட்சி, ஏப் 18

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவு போஷாக்கு குழுவினால் சுகாதார வாரத்தையொட்டி கிராம அலுவலர் கொத்தணிப் பிரிவுகளுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கடந்த வாரம் நடத்தப்பட்டன.

தொண்டமனாறு கெருடாவில் கொத்தணி, வல்வெட்டித்துறை பொலிகண்டி கொத்தணி, அல்வாய் கொத்தணி, புலோலி கொத்தணி, பருத்தித்துறைக் கொத்தணி, மந்திகைக் கொத்தணி, தும்பளைக் கொத்தணி ஆகிய 7 கொத்தணிகளில் சுகாதார வார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன: (ஐ-173)

### லொறிகளுக்குப் பதிலாக மினிபஸ்

வடமராட்சி, ஏப். 18

வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பாவனைப் பொருள்களை ஏற்றி இறக்குவதில் மினிபஸ்கள் சேவையிலீடுபட்டுள்ளன.

குடாநாட்டிலுள்ள லொறிகள் பெரும் எண்ணிக்கையில் பருத்தித்துறை, காங்கேசன்துறை துறைமுகங்களிலிருந்து கப்பல் பொருள்களை ஏற்றி இறக்குவதால் யாழ்ப்பாணத்திலிருந்து வடமராட்சிப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு பொருள்களை ஏற்றி இறக்க லொறி வண்டிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ஐ-173)

### படையினர் அமைத்த தண்ணீர்ப் பந்தல்

திருநெல்வேலி, ஏப். 18

கடந்த 14 ஆம் 15 ஆம் திகதிகளில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர், தீர்த்த உற்சவங்கள் நடைபெற்ற போது பக்தர்களின் நலன் கருதி அப்பகுதியில் உள்ள படையினர் மானிப்பாய்ச் சந்திக்கு அண்மையில் தண்ணீர்ப் பந்தல் தாக சாந்தி நிலையம் ஒன்றை அமைத்திருந்தனர். (ஐ-135)

### மாதாந்த உதவிப்பணம்

கொழும்புத்துறை, ஏப். 18

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் மற்றும் காசநோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள் தற்போது பிரதேச செயலக சமூக கழக சேவைப் பிரிவினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பணத்தைப் பெறுவோர் தத்தமது பகுதி அஞ்சல் அலுவலகங்களுக்கு நேரில் சென்று ஏப்ரல் மாதக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிரதேசச் செயலாளர் திரு. து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-30)

### விளையாட்டுப் போட்டிகள்

செம்பியன்பற்று, ஏப்.18

மருதங்கேணி கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் இரண்டாம் தவணை ஆரம்பத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-36)

### கெயர் நிறுவனம் மீண்டும் யாழ். நகரில்

பருத்தித்துறையில் இயங்கி வந்த சர்வதேச கெயர் நிறுவனம் இம் மாதம் முதல் யாழ்பாணத்தில் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் வலிகாமம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலிருந்து மக்கள் வடமராட்சி தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்ததைத் தொடர்ந்து யாழ். நகரில் இயங்கிவந்த சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் பருத்தித்துறைக்கு இடம்பெயர்ந்திருந்தமை தெரிந்ததே. (ஐ-173)

### கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கு அன்பளிப்பு

கோப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த 38 பாடசாலைகளுக்கு உபகரணங்கள் பல அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டன. 511 ஆவது படைப்பிரிவினர் இவற்றை பாடசாலை அதிபர்களிடம் வழங்கினர்.

அலுவலக உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் ஆரம்பக் கல்வி உபகரணங்கள், மனையியல் உபகரணங்கள் என்பன இவற்றுள் அடங்கும். (ஐ)

### குண்டும் குழியுமாக வேம்படி வீதி

யாழ்ப்பாணம் வேம்படி வீதி குண்டும் குழியுமான நிலையில் உள்ளது. முக்கிய தேவைகளைக் கவனிக்கும் பொருட்டு நகரின்மத்திய பகுதிக்குச் செல்வதற்கான பிரதான பாதையாக இது தற்போது இருப்பதால் இந்த வீதியைத் திருத்த விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-111)

### தேங்காய் விலை சூடு பிடிக்கிறது

தென்மராட்சி, ஏப். 18

சாவகச்சேரி சந்தைக்கு வலிகாமம் வடமராட்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வரத் தொடங்கியுள்ளதால் சந்தையில் தேங்காயின் விலை சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

கடந்த மாதம்வரை மூன்று ரூபாவாக விற்கப்பட்ட தேங்காய் தற்போது ஏழு ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. (ஐ-117)

### பூசகர்கள் பற்றாக்குறை

குடாநாட்டில் பூசகர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் பல இந்து ஆலயங்களில் பூசைகளை ஒழுங்காக நடத்த முடியாதுள்ளது.

ஒரு பூசகர் பல கோயில்களில் பூசை நடத்த வேண்டி இருப்பதால் கோயில்களில் மூன்று வேளை பூசைகளை நடத்த முடியாத நிலை உள்ளது. (ஐ-30)

### வேலையற்றோரை விண்ணப்பிக்க கோரிக்கை

சாவகச்சேரி, ஏப். 18

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகளில் தென்மராட்சிப் பகுதியில் பாடசாலைக் கல்வியை முடித்து விட்டு தொழிலற்று இருக்கும் இளைஞர்கள் அனைவரையும் விண்ணப்பிக்கும்படி இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரி செ. நாகேந்திரம் தெரிவித்துள்ளார். (ஐ-31)

### ஆலயத்துக்கு ஒலிபெருக்கி

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி கோயிலுக்கு ஒலிபெருக்கி அமைப்பு ஒன்று அவ்வூரைச் சேர்ந்த அடியார் ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியலில் இழைக்கப்பட்ட மற்றொரு சரித்திரத் தவறு;

# கௌடாவை வீழ்த்தியதன் மூலம் காங்கிரஸ் சாதித்தது என்ன?

இந்திய அரசியலில் இன்னொரு தவறு இழைக்கப்படுகிறது. இன்னொரு தடவைதான் தனிக்கட்சி ஆட்சியை மத்தியில் அமைக்க முடியும் என ஒரு தீக்கோழி நடந்து கொள்வது போல் காங்கிரஸ் கட்சி எண்ணுகிறது. அது மட்டுமன்றி வேறொரு அரசாங்கம் அமைவதாயின் அது ஒரு கூட்டரசாங்கமாகவே இருக்கும் என்றும் கடந்த கால அனுபவங்களைக் கொண்டு மக்கள் அத்தகைய நிலையில்லாத கூட்டரசாங்கங்களை விடுத்து காங்கிரஸையே ஆட்சியில் அமர்த்துவார்கள் எனவும் ஊகிக்கிறது.

இந்த எண்ணத்தில் தான் தேவகௌடா அரசாங்கத்தைக் கவிழ்க்கத் துணிந்தது காங்கிரஸ். இதன் பின்னர் தமது ஆட்சியை அமைக்க முடியும் என்பதுதான் காங்கிரஸின் கணக்கு! (1980, 1991) ஆண்டுகளில் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு அந்தக் கட்சி இத்தகைய தொரு நம்பிக்கையை வளர்த்துள்ளது. ஆனால் உண்மையில் 1980 இல் ஆட்சிக்கு வந்தது இந்திரா காந்தியே தவிர ஆரம்பத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி அல்ல. இந்திரா காங்கிரஸ் என்ற இந்திராகாந்தியின் காங்கிரஸ் கட்சியே ஆட்சிக்கு வந்தது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் உண்மையான பலம் 1989 ஆம் ஆண்டுத் தேர்தலில் வெளிப்பட்டது. சந்தேகத்துக்கு இடமில்லாமல் 197 ஆசனங்களைப் பெற்றுத் தனிப்பெருங் கட்சியாக அது வந்தது. ஆனால், வேறொரு கட்சியின் ஆதரவில்லாமல் அது தனியாக ஆட்சியமைத்திருக்க முடியாது. எனவே ராஜீவ் காந்தி சாதுரியமான முறையில் தனது கட்சி ஆட்சியமைப்பதைத் தவிர்த்துக் கொண்டார். அப்போது கூட அவரின் நண்பர்கள் சிலர் ஜனாதிபதி ராஜீவ் காந்தியை ஆட்சியமைக்க அழைக்க வேண்டுமென விரும்பினர். இன்னும் சிலர் லோகசபையின் ஆயுட்காலம் இன்னமும் முடியாததால் அதனைக் கலைப்பதற்குச் சிபார்சு செய்ய வேண்டாமென ராஜீவ் காந்தியைக் கேட்குமளவுக்கு கூடச் சென்றனர்,

ராஜீவ் காந்தியின் படுகொலையை அடுத்து உருவான அனுதாப அலை இல்லாது போயிருக்குமானால் 1991 இல் நடந்த தேர்தலில் 1989ஆம்ஆண்டுத் தேர்தலிலும் பார்க்கச் சிறப்பாகச் செய்து லோக சபையில் 232 ஆசனங்களைப் பெற காங்கிரஸ் கட்சியால் முடியாமல் போயிருக்கும். அவ்வாறிருந்தும் கூட 1991 இல் நடந்த முதலாவது நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்களிப்பின் போது அது தன் சொந்தப் பலத்தில் வெற்றி பெற்றிருக்க முடியாது. 540 உறுப்பினர்களைக் கொண்ட லோக சபையில் 241 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 111 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தார்கள். 112 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. 1993 இல் நிகழ்ந்த இரண்டாவது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் அது எவ்வாறு வெற்றி பெற்றதென்பது யாவரும் அறிந்ததே.

1975 இல் இருந்து காங்கிரஸின் வீழ்ச்சி ஆரம்பமானதெனலாம். 1980 இல் அது நல்ல பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது என்பதில் சந்தேகமில்லை. இது இந்திரா காந்தியின் தனிப்பட்ட வெற்றியே தவிர காங்கிரஸ் கட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்ட விருப்பினால் ஏற்பட்ட வெற்றி அல்ல.

இருந்தபோதிலும் இந்திய அரசியலில் தனது பிடி தளர்வதை இந்திராகூட உணர்ந்திருந்தார். தவிர 1984 பிற்பகுதியில் நடைபெறவிருந்த பொதுத்தேர்தலில் இந்திரா சிறந்த வெற்றியைப் பெற முடியாது என்பதும் ஓரளவுக்கு உறுதியாகவிருந்தது.

இந்திரா காங்கிரஸ் கட்சியானது இந்திரா காந்தியின் தனிப்பட்ட உருவாக்கமாக இருந்த போதிலும் காலப்போக்கில் அது சஞ்சய் காந்தியின் செல்வாக்குக்கும் வழிகாட்டுதலுக்கும் உட்படலாயிற்று. மேலும் அக் கட்சியானது செல்வாக்கு மிக்க ஒரு சிறிய குழுவை மையமாகவைத்து இயங்கியதுடன் ஊழல், இனவாதம் போன்றவற்றாலும் பீடிக்கப்பட்டிருந்தது. ஒரு விதமான பாதுகாப்பில்லாத உணர்வினைக் கொண்டிருந்த இந்திரா காந்தி வேறொருவரையும் நம்பாது ஆட்சிப் பொறுப்பையும் அதிகாரத்தையும் தன்னிடத்தில் குவித்துக் கொண்டு ஒரு சில நெருங்கிய ஆலோசகர்களை நம்பிக் கொண்டிருந்தார்.

அவரின் அடுக்களை அமைச்சரவை எல்லோருக்கும் தெரிந்த ஒரு நிறுவனமாக இருந்தது. சஞ்சய் காந்தி அதனைமேலும் சுத்திகரித்தார்.

இந்த நிலையானது பதவி ஆசை உடையவரெனச் சந்தேகிக்கப்படும் எந்தவொரு தலைவரும் அகற்றப்படுவதற்கு வழிகோலியது. தேவகாந்பரூடா விருப்புடன் கூறுவதுபோல இந்திரா என்றால் இந்தியா என்ற நிலை இருந்தது.

மதிப்பதற்குரிய தலைவர்களைக்கூட வெளிப்படையாக அவமதிக்கும் வக்கிர ஆசை கொண்டவராக சஞ்சய் காந்தி விளங்கினார். ஊழலானது மிகவும் அதிகளவிலும் மிகவும் கௌரவமான முறையிலும் இடம்பெற்றது. கட்சியானது வெளிநாட்டு வழக்குநர்களின் ஒப்பந்தங்களில் தனக்கென நிதி கோருவது நல்ல முறையில் அமுல் படுத்தப்பட்டது. இனவாதத்தைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் கட்சியானது 1975-1977 காலப்பகுதியில் தெளிவான முஸ்லிம் எதிர்ப்பு சாயலைக் கொண்டிருந்தது.

1977 இல் நடந்த தேர்தலில் முஸ்லிம்கள் பெருமளவில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வாக்களித்தார்கள் என எண்ணியதன் மூலம் சஞ்சய் காந்தி இதனை மேலும் வெளிப்படையாக்கினார்.

சஞ்சய் காந்தியின் மரணத்தின் பின்னர் இந்திராகாந்தி இந்துமத சடங்குகள் வைபவங்கள் மீது நாட்டங்கொள்ளத் தொடங்கியமை புலப்படலாயிற்று. அவர் வெளிப்படையாகவே கோயில்களுக்கும் வணக்க ஸ்தலங்களுக்கும் விஜயம் செய்தார்.

தொடர்ந்து வந்த ராஜீவ் காந்தி இவற்றையெல்லாம் சரிசெய்ய முயற்சித்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக 1985 இல் ஒருவருட பிரதம மந்திரி பதவியின் பின்னர் சார்பானதும் எதிரானதுமான அரசியல் சுழியில் அகப்பட்டு அவர் மீளமுடியாமல் தவித்தார்.

இனவாதப் போக்கை முதலில் எடுப்பதாயின் ராஜீவின் மதசார்பற்ற தன்மை சந்தேகத்திற்கிடமற்றது. ஆனால், என்ன காரணத்துக்காக அவர் 1986 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இந்துமத சுருபங்களின் வழிபாட்டுக்காக பாபரி மஸ்ஜித் இனை திறந்துவிடுவதுக்குச் சம்மதித்தார் என்பதை அவரால் விளக்க முடியவில்லை. இதுவே காங்கிரஸின் மீதான இந்து மதத்தின் செல்வாக்காக ஆரம்பித்து காலப்போக்கில் அது இந்திரா காங்கிரஸையே விழுங்கிவிட்டது. ராஜீவ்காந்தி உதவியற்ற வெறும் பார்வையாளராக மாறினார். ஒன்றை மட்டும் நிச்சயம் கூறலாம். ராஜீவ் காந்தியின் அரசியல் அனுபவக்குறைவு அவரை அவரது அரசியல் ஆலோசகர்களை மறுத்துரைக்கவோ அல்லது இனவாதத்தின் தாக்கத்தைத் துணிவுடன் எதிர்த்து நிற்கவோ இயலாதவாறு செய்துவிட்டது.

அதிகரித்த ஊழலைப் பொறுத்த வரையில் ராஜீவ் காந்தியின் தனிப்பட்ட நாணயத் தன்மை அசைக்க முடியாததாக இருந்தபோதிலும் அவர் அதிகவிலை கொடுக்க வேண்டியதாயிற்று. அவரைச் சூழ்ந்திருந்த அரசியல் இயந்திரம் அவரை முற்றாகவே கைவிட்டது.

இந்தவிடயத்தை பொறுத்த வரையில் நரசிம்மராவுடைய காங்கிரஸ் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மிகவும் பாதகமான நிலையில் இருந்தன. ஏறக்குறைய அவரது அமைச்சரவையின் அரைப்பங்கினர் விரும்பத்தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இந்திய அரசியல் வரலாற்றில் முதற்றடவையாக மிக உயர்ந்த பிரதம மந்திரி பதவியை வகித்த ஒருவர் குற்றவியல் வழக்கொன்றில் விசாரணை செய்யப்பட்டார்.

சீதாராம் கேசரியின் தலைமையிலான காங்கிரஸ் கட்சி கடந்த கால காங்கிரஸ்கட்சியினின்றும் அதிகளவு வேறுபட்டதாகத் தெரியவில்லை. இந்தியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தது தானே என்றும் மகாத்மா காந்தி, ஜவகர்லால்நேரு போன்றோரின் கட்சிதானே என்றும், ஆதலால்மக்கள் மீண்டும் தன்னைத் தேர்ந்தெடுப்பார்கள் என்றும் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து கூறிவருகிறது. ஆனால் காங்கிரஸ் கட்சியினர் கனவுலகில் வாழ்கின்றனர்.

இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான மக்கள் அதாவது பெரும்பான்மையான வாக்காளர்கள். இந்திய சுதந்திரத்திற்குப் பின்னர் பிறந்தவர்கள். அவர்களைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சியானது சுக்ராம்களினதும், சதீஸ் சர்மாக்களினதும் ஹவாலா ஊழல் பேர்வழிகளினதும் கட்சி.

எனவே காங்கிரஸ் தலைமைப்பீடமானது மத்தியில் தான் அரசமைக்கலாம் என்ற நம்பிக்கையைக் கைவிடுவது நல்லது. ஏனைய கட்சிகள் காங்கிரஸ் கட்சியைவிட குறைந்த ஆதரவை உடையனவாக இருப்பது காங்கிரஸுக்கு அதிக பலத்தைக் கொடுக்கும் எனக் கொள்ள முடியாது. தற்சமயம் காங்கிரஸ் கட்சிகூட தான் ஆரம்பத்தில் கொண்டிருந்த குறைபாடுகளையும் உறுதியற்ற நிலையையுமே கொண்டுள்ளது. அப்படியானால் அதனுடைய திட்டம் எப்படியானதாக இருக்கவேண்டும்?

காங்கிரஸ் கட்சியானது ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கான தனது ஆதரவை விலக்கி அதனை வீழ்ச்சியடையச் செய்யுமானால் அது அரசாங்கத்தை அமைக்க அழைக்கப்படும் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது.

ஜி. கே. மூப்பனாரோ அல்லது அவரது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்களோ காங்கிரஸ் உடன் இணைவதன் மூலம் தமது செல்வாக்கு மிக்க நிலையை இழக்கவோ அல்லது டில்லியில் உள்ள ஒரு சிறிய குழுவினரால் ஆளப்படுவதையோ விரும்ப மாட்டார்கள். முன்னொரு போதும் இல்லாத மிகவும் முக்கியமான அமைச்சரவைப் பதவிகளை அவர்கள் இன்று கொண்டுள்ளார்கள்.

தவிர காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கி புதிய தேர்தல் நடைபெறுமாயின் அது தன்னுடன் இணைய வேறு கட்சியினரைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கும். காரணம் அது புதிய தேர்தல் நடத்தப்படுவதற்கான முழுப் பொறுப்பையும் தானே ஏற்க வேண்டியதாக வருவதுடன் அந்தந்தத் தேர்தலில் 1996 இல் அது பெற்ற வெற்றியைக் காட்டிலும் அதிகளவில் அதனால் பெறமுடியாது.

எனவே காங்கிரஸின் சிறந்த திட்டம் என்னவாக இருக்குமென்றால் அரசுடன் இணையத்தான் விரும்புவதாக ஐக்கிய முன்னணிக்கு கூறுவதாகும். கூட்டரசாங்கமொன்றை நிறுவுவதற்கான இந்த நியாயபூர்வமான கோரிக்கை நிராகரிக்கப்படுமாயின் காங்கிரஸ் கட்சியானது உறுதியான ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணத்தை முன்வைத்து தனது ஆதரவை விலக்கிக்கொள்ளலாம்.

தேர்தல் அவசியமானதெனக் கருதப்படும் போது காங்கிரஸின் இந்தக் காரணம் ஒருபோதும் அதற்கு எதிரானதாகக் கொள்ளப்படமாட்டாது. ஆனால், பின்னர் அது பல மாநிலங்களிலும் இடப்பகிர்வு செய்வதற்கு பங்காளர்களைக் கண்டு பிடிப்பதுடன் ஒரு பொதுவான நிகழ்ச்சித் திட்டத்தையும் உருவாக்க நேரிடும். இந்த ஒரே ஒரு வழியின் மூலமே காங்கிரஸ் மத்தியில் ஆட்சி அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதை உறுதிப்படுத்தமுடியும். ★

(நன்றி: புரொண்ட் லைன்)

## 3 படையினர் காயம்

யாழ் குடாநாட்டில் படையினரின் இரண்டு காவல் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியதில் 3 படையினர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலதிக விவரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

## மத்திய கல்லூரி அணி வெற்றி

யாழ் மத்திய கல்லூரியைச் சேர்ந்த பழையமாணவர் அணி ஒன்றுக்கும், யாழ். பொலிஸ் அணிக்கும் இடையே புது வருடக் தினமான கடந்த திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 25 ஓவர்களைக் கொண்ட சிநேகபூர்வ மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 15 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

(ஐ-51)


# பதவி வெற்றிடம்

கட்டட அளவையாளரும் + வேலை ஸ்தல மேற்பார்வையாளருக்குமான பதவி வெற்றிடம்

தகைமைகள்:

★ க. பொ. த. சாதாரண பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல்

★ தொழிநுட்ப கல்லூரியில் கட்டட நிர்மாணம் அல்லது கட்டட அளவையாளராக சித்தியடைந்திருத்தல்.

★ கட்டட வேலை ஸ்தலத்தில் 1—2 வருடங்கள் முன் அனுபவம்

★ ஆங்கிலத்திலும், தமிழிலும் தெளிவான கையெழுத்து இருத்தல் வேண்டும

★ வயதெல்லை 25 இற்கு உட்பட்டவர்கள்

★ சிறந்த தகைமைகளுக்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.

★ விண்ணப்பப்படிவங்களை சொந்தக்கையெழுத்தில் தயாரித்து தேவையான சான்றிதழ்களுடன் (பிரதி) 23—04—1997-ற்கு முன் பதிவுத்தபாலில் மட்டும் அனுப்பி வைக்கவும்

சு. கி மனோகரபூபன்
நிர்வாகப் பங்காளர்
மனோகரன் & வெற்றிவேல்

49 A, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (46409)



# திருமறைக் கலாமன்றம் நாடகப் பயிலகம் (SCHOOL OF DRAMA)

திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் நடத்தப்படும் வருடாந்த நாடகப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

நாடக அரங்கியலில் பயிற்சி பெற விரும்புபவர்களுக்கும், நாடக அரங்கியலைக் கற்கை நெறியாகக் கொண்டவர்களுக்கும் உதவக் கூடிய வகையில் இப் பயிற்சி நெறி அமையும்.

15 வயதுக்கு மேற்பட்ட இருபாலார்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30 — 04 — 97

யாழ். திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம் (சி/517)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் ஒரு சிறிய குடும்பத்துக்கு படித்த பணிப் பெண் (15,வயதிற்கு மேல்) தேவை. தொடர்பு: மே/பா இல, 607, உதயன், யாழ்ப்பாணம். [46406]

### மணமகள் தேவை

பிரபல்ய கிறிஸ்தவ தமிழ்க் குடும்பம். வயது 48, அழகிய ஒரே வயதுடைய ஒரே மத மணமகளைத் தேடுகின்றார். தொடர்பு:-இல. 12, அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணம். [46404]

### தவறிவிட்டது

கடந்த 9-ம் திகதி ஸ்ரான்லி வீதியில் உள்ள—முனீஸ்வரன் கபேயில் பெறுமதியானஎனது மூக்குக் கண்ணாடி தவறிவிட்டது. சண்டெடுத்தவர்கள் ந. பேரின்பநாதன், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, 45/4,நாயன்மார் வீதி, நல்லூர் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [46400]

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்கு உகந்த தென்னம் நாற்றுக்கள் (பல இனங்கள்) விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. மு. காங்கேசு, ஐயா கடையடி, கண்டிவீதி, மீசாலை. [43756]

## சுகாதாரக் கருத்தரங்கு

திருநெல்வேலி, ஏப். 18

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று சங்க மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளது. (ஐ-135)

## தீவுப்பகுதியில் அ. அட்டை விநியோகம்

தென்மராட்சி, ஏப். 18

கடந்த ஐந்து வருடங்களாக படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த பத்து வயதுக்கு மேற்பட்டோருக்கு யாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவினரால் அனுப்பப்பட்ட 3 ஆயித்துக்கு மேற்பட்ட விசேடஅடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர்களால் விநியோகிக்கப்படுகின்றன.

இதுவரை காலமும் இப்பகுதி மக்கள் காரைநகர் கடற்படையினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளையே பயன்படுத்தி வந்தனர். (ஐ-117)

## வைத்திய சேவை

**Dr. சிவனடியான்**

கொழும்பிலிருந்து திரும்பி மீண்டும் தன் சேவையை ஆரம்பித்துள்ளார். காலையில் நவாலியிலும், மாலையில் ஆனைக்கோட்டையிலும் சிகிச்சையளிக்கப்படும்.

Dr. சிவனடியான்

(46403)

---

நவாலி

முருகானந்தா பாலர் பாடசாலை

## ஆசிரியர் தேவை

மேற்படி பாடசாலையில் கற்பிப்பதற்கு பயிற்சி பெற்ற ஆசிரியர் தேவை. இந்து சமயத்தைச் சேர்ந்த, மானிப்பாய் கோயிற்பற்றுக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது. விண்ணப்பங்களை நேரிலோ கடிதமூலமோ ஒப்படைக்கலாம்

**தலைவர்,**
**நவாலி முருகானந்தா**
**சனசமூக நிலையம்.**

(46408)

---

## வலி. கிழக்கு பிரதேச சபை,

நீர்வேலி.

வீடமைப்பு நகர சீர்திருத்த (பிரிவு 268) இன் பிரகாரமான

## அறிவித்தல்

வலி. கிழக்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகவே கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கும் பிரதேச சபையிலிருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து வலி. கிழக்கு பிரதேச சபையின் விசேட ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலதிக விவரங்களை வலி. கிழக்கு பிரதேச சபை தலைமைப் பணிமனையிலும், அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய் உப அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

**கதிரவேலு கேதீஸ்வரன்,**
விசேட ஆணையாளர்,
வலி. கிழக்கு பிரதேச சபை.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.

[சி/514]

---

## தேவை


புரியாணி தயாரிப்பதில் நன்கு அனுபவம் உள்ளவர்கள், தேநீர் தயாரிப்பவர்கள் சிற்றுண்டி பரிமாறுநர் (சப்ளையர்ஸ்) தேவை. தொடர்பு கொள்ளவும்:

**"றிக்கோ ஹோட்டல்"**
**370, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முக்கிய குறிப்பு:
யாழ். மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. (46407)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 29 | 20 |
| 01 | 03 |
| 1929 | 1997 |

### அமரர் சின்னத்துரை இராசரத்தினம்

(ரதி மில்ஸ் - காரைநகர்)

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும், அன்பின் திருவுருவாகவும், பண்பின் சிகரமாகவும், பாசத்தின் உறைவிடமாகவும், அறிவின் இலக்கணமாகவும் இருந்து எமக்கு வழிகாட்டி எம்மை விட்டகன்ற எமது அன்புத் தந்தையே! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளிலும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயரும்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இ. அருச்சுனன்,
115, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (9473)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 15 | 29 |
| 07 | 04 |
| 1936 | 1996 |

### திருமதி இராமசாமி ஞானம்மா

**திதி: 18 - 04 - 97**

அன்புத் தாயே!
பிள்ளைகள் கதறிட,
உடன் பிறந்தோர், உற்றார்,
உறவினர் கலங்கிட,
பொல்லா நோய் வந்து
சொல்லாமல் கொண்டு சென்றதே!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

**மக்கள், மருமக்கள், சகோதரர்,**
**மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.**

கேதீஸ்வரன் ஸ்ரோர்ஸ்,
66, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (9530)

---

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 08 | 08 |
| 04 | 05 |
| 1930 | 1987 |

### சபாபதி நாகராசா நாகேந்திரம்

(உரிமையாளர் விநாயகர் மர அரிவுத் தொழிற்சாலை)

**திதி: 18 - 04 - 1997 (வெள்ளி)**

எம் குடும்ப விருட்சத்தை தாங்கி நின்ற விருதே!
நல்லறிவூட்டி நல்வழிகாட்டி நின்ற கலங்கரை விளக்கே!
பாசத்தின் பெருமை சொல்லி பார் புகழ கல்வியூட்டி,
கற்றவர் மத்தியில் எம்மை தலை நிமிர்ந்து
வாழ வைத்த தெய்வமே ஐயா!
நாம் வாழும் நேரத்தில் ஓடி நீங்கள்
சென்றது எங்கே ஐயா?

உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்:
**அன்புமனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பிரதான வீதி,
சங்கானை. (9528)

---

## கண்ணீர் அஞ்சலி

### இராமலிங்கம் சுந்தரலிங்கம்

(உரிமையாளர் சுந்தரலிங்கம் கராஜ் - டச்சு வீதி, சாவகச்சேரி)

ஆலய பரிபாலன சபையின் முன்னாள் நிர்வாக சபைஉறுப்பினர்

**இராமலிங்கம் சுந்தரலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலனசபை,**
**ஸ்ரீபழனி ஆண்டவர் தேவஸ்தானம்.**

டச்சுவீதி,
சாவகச்சேரி.

(சி/516)

# கயிறிழுத்தலில் தோற்றவர்களே இன்னிசை நிகழ்வில் கைகலப்பு!

## திருமலை, அபயபுர சம்பவம் குறித்து மேலும் தகவல்

கொழும்பு, ஏப். 18

திருமலை அபயபுர விளையாட்டரங்கில் புத்தாண்டு தினத்தில் இடம் பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பொலீஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் கயிறிழுப்புப் போட்டியும் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் பொது மக்களிடம் பொலீஸார் தோல்வி அடைந்ததே கைகலப்புக்கும் அதன் பின்னர் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கும் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது—

புத்தாண்டை முன்னிட்டு கடந்த 15 ஆம் திகதி அபயபுர விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. ஊர் மக்களுக்கும் பொலீஸாருக்கும் இடையில் கயிறிழுப்புப் போட்டி ஒன்றும் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பொலீஸ் அணி தோல்வி அடைந்தது. இதனை அடுத்து ஊராருக்கும் பொலீஸாருக்கும்இடையில் மனக்கசப்புகள் எழுந்தன.

விளையாட்டுப் போட்டிகளின் பின்னர் இரவு இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் சிவில் உடையில் பொலீஸார் அங்கு வந்து பொது மக்களுடன் கைகலப்பில் ஈடுபட்டனர்.

சமாதான முயற்சியில் ஈடுபட முயன்ற திருமலை நகர சபை உறுப்பினர் நிமல் காமினி என்பவரும் பொலீஸாரினால் தாக்கப்பட்டார்.

பொலீஸார் கையில் கிடைத்தவற்றை எடுத்து ஊர் மக்களைத் தாக்கினர்.

அப்பொழுது உப்பு வெளிப் பொலீஸ் நிலையத்தில் இருந்து அங்கு உதவிக்கு வந்து சேர்ந்த பொலீஸார் பொது மக்களை நோக்கிச் சுட்டனர்.

அப்பொழுதே பொது மக்கள் இருவர் காயமடைந்தனர்.

திருமலை மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரின்டன் பி. என். டி. சில்வ அங்கு விரைந்து வந்து பொது மக்களைச்சுட பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் 4 துப்பாக்கிகளை உப்பு வெளிப் பொலீஸாரிடம் இருந்து கைப்பற்றினார்.

அதன் பின்னர் உப்பு வெளிப் பொலீஸ் நிலையத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் பொது மக்கள் நான்கு பொலீஸாரை அடையாளம் காட்டினர். (இ)

## வன்னியிலிருந்து மேலும் 220 பேர்

குருநகர், ஏப். 18

வன்னிப் பகுதியில் இருந்து நேற்றும் 54 குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் குருநகர் வந்து சேர்ந்தனர்.

பத்து வள்ளங்களிலும் 2 பிளாஸ்ரிக் படகுகளிலும் இவர்கள் வந்தனர்.

இவர்கள் அனைவரும் குருநகர் சீநோர் தொழிற்சாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதே சமயம் கடந்த 14 ஆம், 15 ஆம் திகதிகளில் வந்து சேர்ந்து சீநோர் தொழிற்சாலையில் தங்கியிருந்தவர்களில் பலர் விசாரணையின் பின்னர் நேற்று வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-51-100)

# சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் சூழல்பாதுகாப்பு பிரிவுகள் அமையும்

திருநெல்வேலி, ஏப். 18

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றப் பிரிவிலும் சூழல் பாதுகாப்பு பிரிவை அமைக்குமாறு கோரி உள்ளூராட்சித் திணைக்களம் சுற்றறிக்கை ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

சூழல் பாதுகாப்புப் பிரிவை அமைக்கும்போது பிரதேச செயலக அலுவலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள சூழல் அபிவிருத்தி உதவியாளர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் பகுதி உத்தியோகத்தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், வெளிவேலைப் பகுதி அலுவலர்கள் ஆகியோரின் உதவிகளை பெற்றுக் கொள்ளலாம் என்று அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை —

கொழும்பிலுள்ள சூழல் பாதுகாப்பு அமைச்சு உள்ளூராட்சி மன்றங்களில் அமைக்கப்பட்டுள்ள சூழல் பாதுகாப்புப் பிரிவு தொடர்பான முன்னேற்ற செயல்திட்ட அறிக்கையை ஒவ்வொரு மாதமும் தமக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவித்துள்ளது.

கழிவுப் பொருள்களை அகற்றுவது தொடர்பாக முகாமைத்துவம் சம்பந்தமான வருடாந்த நடைமுறைத் திட்டத்தை நகர உள்ளூராட்சி மன்றங்கள் தயாரிக்க வேண்டியிருப்பதால் அதற்கு நகர, உள்ளூராட்சி மன்றங்கள் முக்கியத்துவம் வழங்கி செயலாற்ற வேண்டும் என்று யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. ரி. வி. கிருஷ்ணசாமி தமது பிரிவைச்சேர்ந்த சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் கேட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்கள் தமது சூழல் பாதுகாப்பு பிரிவில் சேவை புரியும் உத்தியோகத்தர் பெயரையும், வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென நிதி ஒதுக்கப்பட்டிருப்பின் அதன் விவரத்தையும் தமக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# தொண்டர் தம் பெருமையே பெரிது

"தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று செந்தமிழ்க் கிழவி ஒளவையார் கூறினார். இதனையே திருவெம்பாவையில் மணிவாசகப் பெருமான் பாடும்போது "உன்னடியார் தாள் பணிவோம்" என்றார். சிவவேடம் தாங்கிய அடியார்களை சிவன் என்றே போற்றிய வரலாறுகளும் உண்டு.

மூவகை வழிபாடுகளான குரு லிங்க சங்கம வழிபாடுகளில் சங்கம வழிபாடே உயர்ந்த ஸ்தானத்தில் வைக்கப்பட்டுள்ளது. அடியார்களின் வரலாற்றைத் தந்த சேக்கிழார் பெருமான் அதை மாக்கதை என்று கூறிப் போந்தார். திருக்கூட்டச் சிறப்பு என்ற பகுதியிலே அடியவரின் பெருமை கூற வந்த பெருமான் அடியார்களை ஞானஒளி பரப்புபவர்கள் என்று வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். அடியவர் சிறப்பைத் தந்த சேக்கிழார் பெருமானுக்கு அரசன் அளித்த மதிப்புகளும், மரியாதைகளும் அடியவர் பெருமையின் மகத்துவம் எத்தகையது என்பதை நாம் உணரக் கூடியதாக உள்ளது.

அடியவர்கள் இறைவனை வேண்டுவதெல்லாம் உலக நலத்திற்கே என்பதை அவர்களின் அற்புதச் செயல்களிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக மக்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டபோது இறைவனிடம் வேண்டி பொற்காசு பெற்றார்கள் சம்பந்தரும் அப்பரும். நெற்குவியல் பெற்றார் சுந்தரர். மக்கள் நோய்வந்து துன்பப்பட்டபோது அந்த நோய் நீங்க இறைவனை வேண்டினார்கள்.

இப்படியாக அடியார்கள் அனைவரும் மக்கள் தொண்டிற்கென்றே வாழ்ந்தார்கள் என்பதை பெரியபுராணம் விரிவாக எடுத்துச் சொல்கிறது.

கைலையிலே தன் பக்கத்திலே தொண்டனாக இருந்த ஆலால சுந்தரரை தொண்டர்பெருமைக்கு வித்தாக மாற்ற இறைவன் அவரை இந்தவிண்ணுலகிற்குஅனுப்பி வைத்தார். இறைவன் தன்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையோடு வந்து சேர்ந்த சுந்தரர் ஒருநாள் திருவாரூரில் கோயிலுக்குள் நுழைகிறார். அப்போது முன்மண்டபத்திலே விறன்மிண்ட நாயனார் உட்பட அடியார்கள் கூட்டம் கூடியிருக்கிறது. இவர்களை வணங்காமல் சிவனை வணங்க உட்சென்ற சுந்தரரின் நிலைகண்டு அடியார்கள் வேதனைப்பட்டார்கள். விறன்மிண்டர்இதைக் கண்டனம் செய்தார்.

இவர்களின் வேதனையை அறிந்த சிவபெருமான் கோயிலை விட்டு நீங்கினார். அவரைக் காணாது மனம் நொந்த சுந்தரரின் முன் இறைவன் தோன்றி "அடியாரைப் பாடுக" என்று அருளினார். தன் தவறை உணர்ந்த சுந்தரர் "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கு மடியேன்" என்று அடியவர் பெருமை கூறி பெரியபுராணத்தின் காவிய நாயகனாகத் திகழ்ந்தார்.

அறுபத்து மூன்று தனி அடியார்களையும் ஒன்பது தொகை அடியார்களையும் சேர்த்து எழுபத்து இரண்டு அடியார்களின் வரலாறுகளும் பக்தி வைராக்கியத்தின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன. ஒவ்வொரு அடியவர்களும் தங்கள் நெறியில் பிறழாது அனைத்தும் இறைவன் செயலே என்று வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். "அடியார்களுக்கு அமுதளியாமல் யான் உண்ணேன்" என்று தன் செல்வமெல்லாம் அத்தொண்டருக்கே அர்ப்பணித்த இளையான் குடிமாற நாயனார், தொண்டரின் மேன்மை காட்ட நரமாமிசம் கேட்ட இறைவனுக்குத் தன் பிள்ளையையே கறியாக்கிய சிறுத்தொண்டர், சிவவேடம் தாங்கித் தன்னைக் கொல்ல வந்த எதிரியை மன்னித்த மெய்ப்பொருள் நாயனார் நீலகண்டத்தின் மேல் ஆணையிட்ட மனைவியின் சத்தியத்தைக் காத்த மனவைராக்கியம் படைத்த நீலகண்டர், தன் கண்ணையே இறைவனுக்குத் தானமாக்கிய கண்ணப்பர், இப்படியாக அடியவர் செயலை அடுக்கடுக்காக விதந்துரைத்துச் சொல்வதற்கு நாவு ஒன்று போதாதன்றோ!

இறைவனும் தம் அடியார்களின் பெருமையை வெளிப்படுத்த முதலில் அவர்களுக்குத் துன்பச் சுமைகளை ஏற்றி பின் தனது ஆனந்தத் திருக்கூத்தைக் காட்டி மகிழ்விப்பார். ஒருபோதும் நீங்காது அடியவர் உள்ளத்தே உறையும் இறைவன் அவர்களின் நிழலாகவும் கூடவே செல்வார்.

சிவவேடம் சிவத்தை மெய்ப்பிக்கும். அதனால் நாம் சிவனெனவே அவ்வடியாரைத் தொழுதேத்தி வாழ வேண்டும்.

- வானம்பாடி யோகராஜ்

### ஞானக்கதிர்

**நாளை**

**சித்திரை 6**

சனிக்கிழமை

திதி: துவாதசி

முன் இரவு 10.19 வரை.

நட்சத்திரம்: பூரம்

பிற்பகல்: 3.49 வரை.

கரிநாள்

சுபநேரம்: 3.02-4.32

ராகுகாலம்: 9.02-10.32

(பகலுக்கும் இரவுக்கும் [illegible])

## ஜே/75 அ. அட்டை

யாழ்ப்பாணம், ஏப். 18

சுண்டுக்குளி தெற்கு ஜே/75 கிராம சேவையாளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கிராம சேவையாளர் பணிமனையில் வைத்து வழங்கப்படும். (இ)

## அறவழி நூலகம் பழைய இடத்தில் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஏப். 18

அறவழிப் பொது நூலகம் மீண்டும் கைதடி நுணாவில் வைரவர் கோயிலடியில் முன்னர் இயங்கிய இடத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது.

நாவற்குழியில் அமைந்திருந்த அறவழி கிளை நூலகமும் தற்போது தாய் நூலகத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## ச. ச. நிலைய கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப். 18

நீர்வேலி மத்தி இளைஞர் சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வைத்தியக் கலாநிதி திரு. க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன், அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அலுவலர் பபியோ வரோலி, வலி. கிழக்கு பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஐ-30)

# உதயன்

## கப்பல் பயணத் தாமதம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்காக சுமார் பத்தாயிரம் பேர் காத்திருப்பதாக வெளிவந்துள்ள தகவல் ஆரோக்கியமான நிலையைப் பிரதிபலிக்கவில்லை.

குடாநாட்டு மக்களுக்கு உள்ள பயண மார்க்கங்கள் கடல், வான் வழிகளே.

விமானப் பயணம் எப்போதுமே அதிக செலவுடையது. அதனால் பயணிகளில் மிகப் பெரும்பாலானோர் கப்பலில் போக்குவரத்துச் செய்யவே விரும்புகிறார்கள். அவர்களது பொருளாதார நிலையில் கப்பல் பயணமே கட்டுப்படியாகக் கூடியது.

பயண அனுமதியை எதிர்பார்த்துச் சுமார் பத்தாயிரம் பேர் காத்திருக்கிறார்கள் என்பது கவலை தருவதாகும். பயணத்துக்குப் பதிவு செய்து அதற்குரிய பட்டியல் இலக்கத்தைப் பெற்றவர்களே இவர்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தப் பத்தாயிரம் பேரில் மிகப் பெரும்பாலானவர்கள் கப்பல் பயணத்துக்குப் பதிவு செய்தவர்களாகவே இருப்பர் என்று கொள்ளலாம். "மாதக் கணக்காகக் காத்திருக்கிறோம்; ஆனால் பயண நாள் கிட்டவில்லை" என்று அந்தப் பயணிகளில் பலரும் முறைப்பட்டிருக்கின்றார்கள்.

இது கப்பற் பயணம் என்ற நாணயத்தின் ஒரு பக்கம்.

அதன் மறுபக்கத்தைப் பார்த்தால் —

கப்பல் பயணத்துக்குப் பதிவு செய்து பயணத் திகதி அறிவிக்கப்பட்ட பயணிகள் பலர் பயண நிலையத்துக்குத் திரும்புவதில்லை, அதனால் குறைந்த எண்ணிக்கையான பயணிகளுடனேயே கப்பல்கள் பல நாள்கள் சென்றதுண்டு.

அவ்வாறெனில் குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்வதற்கென பத்தாயிரம் பேர் காத்திருப்பதன் மர்மம் என்ன? எங்கோ ஓர் இடத்தில் ஏதோ ஒரு பிழை உண்டு!

காங்கேசன் —திருகோணமலை போக்குவரத்துச் சேவையில் இப்போது ஐந்து பயணிகள் கப்பல்கள் ஈடுபடுத்தப்படுகின்றன. அவ்வாறிருக்க இன்னமும் ஆயிரம் ஆயிரமாக மக்கள் பயணத்துக்குக் காத்துக்கிடப்பதற்கு மூடுமந்திரம் ஏதாவது உண்டா?

கப்பற் பயணப் பணிகள் ஒன்றிணைக்கப்பட்டு சீரான முறையில் நடந்தால் இந்தத் தாமதம் தவிர்க்கப்படலாம். பயணிகள் குறித்த புலனாய்வு அறிக்கை தாமதமாவதால் மக்கள் தமது அவசர அவசிய அலுவல்களாக வெளிமாவட்டம் செல்ல காத்திருப்பது எந்த விதத்திலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல. இந்தப் பணி விரைவுபடுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையின் சகல துறைகளிலும் "பாதுகாப்புக் காரணம்" என்ற ஈட்டி ஊடறுத்துக் குத்துகிறது. இந்த நிலை நீக்கப்படும் வரை தமிழர்களுக்கு இயல்பு வாழ்க்கை என்பது நினைத்தும் பார்க்க முடியாத கானல் நீராகவே தொடரப் போகிறது! அரசு அதனைத்தான் விரும்புகின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# C E L C E

**Centre for English Language and Computer Education**

**C I M A Stage I**

**விரிவுரைகள் 19-04-97 காலை 9.00 மணிக்கு ஆரம்பம்.**

பதிவு செய்தவர்களும், புதிய விண்ணப்பதாரரும் நேரில் வருக.

**தம்பி அன்கோ கட்டடம்**
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (சந்தியிலிருந்து 50 யார்)

(46419) **- நிர்வாக இயக்குநர்.**



சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.

# பதவி வெற்றிடம்

எமது சங்க எல்லைப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து கீழ்வரும் பதவிகளுக்கு, குறித்த தகைமையுடைய ஆண்பாலாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்விச் சான்றிதழ், அண்மையில் கிராமசேவையாளரிடம் பெற்ற வதிவிடசான்றிதழ் ஆகிய பிரதிகளுடன் பொது முகாமையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு **30-04-97** அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித மூலம் அல்லது நேரில் அனுப்பி உறுதிப்படுத்தவும்.

**1. கிளை முகாமையாளர் (208/14)**

(சமயாசமய) 700 - 950 / 15x10 - 20x5

இந்தச் சம்பள அளவுத்திட்டத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

அ. **கல்வித் தகைமை:**

கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) பத்திரம் அல்லது க. பொ. த. (சாதாரணம்) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/தூய கணிதம், தமிழ் பாஷை மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக ஆறு பாடங்களில் சித்தி.

ஆ) வயது — 23 - 40 வரை.

**2. விற்பனையாளர் (சமயாசமய)**

சம்பள அளவுத்திட்டம் — 308/15 685 — 860 / 10x10 — 15x5

இந்தச் சம்பள அளவுத்திட்டத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

அ. **கல்வித் தகைமை**

கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திரம் (கனிஷ்ட பிரிவு) சித்தி அல்லது எட்டாம் வகுப்பு சித்தியுடன் விற்பனைத் தொழிலில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

ஆ. வயது எல்லை — 18 - 30

குறிப்பு: மேற்படி இரு பதவிகளுக்கும் சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப்பணம் செலுத்தல் வேண்டும்.

- பொது முகாமையாளர்

ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.
15-04-1997.

(சி/519)



# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில்: 31 — 07 — 1933

விண்ணுலகில்: 29 — 04 — 1996

அமரர்

**கனகசுந்தரம் தேவதாசன் B O.L Dip. Ed.**

[ஓய்வு பெற்ற ஆசிரியர்]

பாசமென்ற நெய்யூற்றி பகலிரவாய்ப் பார்த்திருந்து ஏற்றி வைத்த தீபம் நீங்கள் இடையினிலே அணைந்து விட்டீர்கள். உங்கள் உருவம் மறைந்தாலும் எம் நினைவுகளில் நீங்கள் என்றும் வாழ்வீர்கள்! உங்கள் அறிவுரைகள் எம்மை என்றும் வழி நடத்தும். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு **மனைவி,**
அன்புப் **பிள்ளைகள்.**

Inner fair line Road,
Dehiwala

(9531)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18 - 04 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## 9 இலங்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்)

— சுன்னாகம் கிழக்கு.

இவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப தேவையான பணத்துக்கு ஏற்பாடு செய்யும்படி கென்யாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம் இவர்களின் உறவினர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலதிக விவரங்களுக்கு உடனடியாக கொழும்பு - 1 குடியரசுக் கட்டடத்தில் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சின் கொன்சலர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

## உத்தேச...

(முதலாம் பக்கத் தொடர்)

கின்றன.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பது அரசமைப்பு சீர் திருத்தத்தில் முக்கிய அம்சமாகும்.

உத்தேச திட்டத்தின் படி நாடாளுமன்ற அங்கத்தவர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் ஒருவர் பெயரளவிலான ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் இவர் பிரதமரின் ஆலோசனைப்படி செயலாற்றுவார்.

உத்தேச அரசமைப்பு சட்ட திருத்தம் இந்த வருட வரவு - செலவுத்திட்ட விவாதம் ஆரம்பிக்க முன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இப்படி அமைச்சர் பீரிஸ் மேலும் கூறினார். (இ-3)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

என்று அந்த அமைப்பினர் தெரிவித்தனர்.

நாளை திருமலையில் இருந்து ''தாரகி'' கப்பல் மூலம் இவர்கள் அழைத்து வரப்பட்டு யாழ். அலுவலகத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் என்றும் அந்த அமைப்பினர் தெரிவித்தனர்.

நாளை வந்து சேரவுள்ள 10பேரின் விவரம் வருமாறு:-

★ இராசநாயகம் நிமலன் —முத்துமாரியம்மன் கோயில் வீதி, சாவகச்சேரி வடக்கு.

★ தனபாலன் ஸ்ரீஸ்கந்தராஜன்—மட்டுவில் தெற்கு.

★ சின்னவன் அழகரத்தினம்—நாவற்காடு, வரணி.

★ நாகராசா ஆனந்தரூபன்—முகமாலை, எழுதுமட்டுவாழ்.

★ சண்முகம் பரமேஸ்வரன் —தோப்பு ஒழுங்கை, மட்டுவில் வடக்கு.

★ தங்கமயில் பிரபாகரன் — மிருசுவில் வடக்கு.

★ சண்முகம் செல்வகுமார் — மறவன்புலோ வடக்கு.

★ வேலும் மயிலும் உதயகுமார் — வேளாபள்ளம், மிருசுவில்.

★ குமாரசாமி சந்திரகுமார் — புத்தூர் கிழக்கு.

★ சின்னர் இரத்தினர் — இயற்றாலை, வரணி.

விடுதலையாகி கொழும்பு சென்ற 7 பேரின் விவரம் வருமாறு:-

தெய்வேந்திரம் சுப்பிரமணியம், சிவலிங்கம் ராஜேஸ்வரன், பொன்னுத்துரை சந்திரமோகன் (இமையாணன், உடுப்பிட்டி), பொன்னம்பலம் குணபாலசிங்கம் (சாவகச்சேரி), குலராசா மோகனராசா, வேலாயுதம் ஞானசேகரன் (முத்துமாரியம்மன் வீதி, சாவகச்சேரி), வேலுப்பிள்ளை சிவரஞ்சன்,

(இ-3)

## திருக்கோணேஸ்..

(முதலாம் பக்கத் தொடர்)

திருமலைக்கு அனுப்ப சிறைச்சாலை அதிகாரிகள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

சட்டத்தரணி எஸ். என். விஸ்வலிங்கம் சட்டத்தரணி திருமதி சரோஜினிதேவி இளங்கோவனின் அநுசரணையுடன் சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தார்.

(இ-3)

# கொழும்பில் இருந்து பொருள்களை யாழ்.ப.நோ.கூ.சங்கம் எடுத்துவரும்

குருநகர், ஏப். 18

யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடாக உள்ள சில பொருள்களை கொழும்பில் இருந்து இங்கு தருவிக்க யாழ் ப. நோ. கூ. சங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இப் பொருள்களைக் கப்பல் மூலம் எடுத்து வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரதிநிதி ஒருவரை கொழும்புக்கு அனுப்ப ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் அச்சகத்துக்குரிய உபகரணங்களும் கொழும்பில் இருந்து எடுத்துவரப்படவுள்ளன. (ஐ-51)

# தனியான ஜெனரேற்றர் மூலம் குருநகருக்கு மின் வழங்குக

## முன்னேற்ற ஐக்கிய முன்னணி மகஜர்

குருநகர், ஏப். 18

குருநகர்ப் பகுதியில் சீராக மின்சாரத்தை வழங்க தனியான ஒரு ஜெனரேற்றரை அமைத்து உதவுமாறு குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு இலங்கை மின்சாரசபையின் யாழ். கிளை பொறியியலாளருக்கு மகஜர் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

குருநகர்ப் பகுதி யாழ். தீவகற்பத்தில் அதிக மீன்பிடிக்கப்படும் பகுதியாக உள்ளதுடன் கடற்றொழிலின் அபிவிருத்திக்கு மின்சாரம் அவசிய தேவையாக உள்ளது. இப்பகுதியில் மக்கள் தொகை அதிகமாக உள்ளதுடன் இடம் பெயர்ந்து சென்ற மக்களில் 85 தொடக்கம் 90 வீதமான மக்கள் மீளவும் குடியேறியுள்ளனர்.

யாழ். கிளையினர் தற்போது குருநகர்ப் பகுதிக்கு வழங்கப்பட்டுவரும் மின் விநியோகம் சீரற்றுக் காணப்படுவதால் இப்பகுதியின் 15 சதவீதமான மக்களுக்கே ஒழுங்கான மின்சாரம் நாளாந்தம் கிடைக்கிறது. ஏனைய மக்களுக்குக் கிடைக்கும் — மின்சாரம் ஒழுங்கில்லாமல் இருப்பதுடன் வன்னியில் இருந்து மக்கள் வந்து குடியேறியதன் பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

எனவே குருநகர்ப் பகுதிக்கு மின்சார சேவையைச் சீராக வழங்க தனியானதோர் ஜெனரேற்றரை அமைத்துஉதவுமாறு மகஜரில் கோரப்பட்டுள்ளது. (ஐ-51)

## இடம் பெயர்ந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில் சுமுகநிலை ஏற்பட்டுள்ளது போலத் தோன்றினாலும் உண்மையில் நிலைமை வழமைக்கு திரும்பவில்லை.

★ பெயரளவில் இல்லாவிட்டாலும் இராணுவ நிர்வாகம் நடப்பதால் மக்கள் பயத்துடனேயே வாழ்கிறார்கள்.

★ சோதனைகள், பாஸ் வழங்கல், ஊரடங்குச் சட்டம், கைதுகள் தொடர்கின்றன பலர் வேலை இல்லாது திண்டாடுகின்றார்கள். நிவாரணத்தில் தங்கி இருந்து அவர்கள் உயிர் வாழ்கின்றார்கள்.

★ நீடித்த சமாதான உடன்பாடு எட்டப்படும் என்பதில் சாத்தியம் குறைவு என்று மக்கள் எண்ணுகிறார்கள்.

★ இலங்கை அகதிகள் இந்தியாவில் புகலிடம் கோருவதைத் தடுக்க வேண்டாம் என்று இலங்கை அதிகாரிகளை வேண்டுகின்றோம்.

★ உண்மையில் உதவி தேடி இலங்கையில் இருந்து வருபவர்களுக்கு புகலிடம் வழங்குமாறு இந்திய அரசைக்கோருகின்றோம்.

★ வன்னியில் வாழும் மக்களுக்கு உணவு உதவிகள் செல்ல இருந்துவரும் அனைத்துத் தடைகளையும் உடன் நீக்குமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

★ வவுனியா முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விசாரணை செய்து பாதுகாப்புக்கு குந்தகம் இல்லாத வகையில் உடன் விடுவிக்க வேண்டும்.

(இ-3-150)

## ஆர்ப்பாட்டம்

ஹஜ் யாத்திரையின் போது அரசியல் நடவடிக்கைகளுக்கு சவுதி அரேபியா விதித்த தடையையும் மீறி ஈரானிய யாத்திரிகர்கள் அமெரிக்காவையும், இஸ்ரேலையும் கண்டித்து மக்காவில் ஆர்ப்பாட்டக் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

(ஐ)

## மூச்சுத் திணறியதால்..

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்பு இருப்பதாக தெரியவருவதால் அவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டார்.

மரண விசாரணையில் நேற்று சாட்சியமளித்த திருமலை மாவட்ட வைத்திய அதிகாரி திருமதி விக்னேஸ்வரி சிவநாதன் தெரிவித்ததாவது:-

கைப்பற்றப்பட்ட மண்டை ஓடு, எலும்புகள் ஆகியவற்றைப் பரிசோதித்ததில் இறந்த பெண் 40 வயதுக்கு உட்பட்டவராகவே இருப்பார்.

அந்தப் பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டு, மூச்சுத் திணறியதாலேயே மரணம் ஏற்பட்டுள்ளது — என்றார்.

கோணேசர் ஆலய பரிபாலன சபைத்தலைவர் எம். கே. செல்வராஜாவும் சாட்சியம் அளித்தார். (இ-3-150)


கர்த்தர் ... உன்னை மென்மேலும் ஆசீர்வதிப்பார்
உபாகமம் 15:5

# புதுக்கடை திறப்பு விழா

# மேசியா நகைமாடம்

**(கிளை ஸ்தாபனம்)**

**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

என்னும் ஸ்தாபனம் **18-04-97** இன்று வெள்ளிக்கிழமை காலை **8 00** மணிக்கு (பழைய நேரம்)திறந்து வைக்கப்படும்.

விசுவாசிகள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருக வருக என அழைக்கின்றோம்.

**மேசியா நகைமாடம்**

**111C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(46399)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org